**செய்தி வெளியீடு எண்: 137** **நாள்: 20.02.2019**

## செய்தி வெளியீடு

தேர்தல் நடைமுறைகள் அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் அணுகத்தக்கனவாக அமைய வேண்டுமென்ற இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க "அணுகத்தகுந்த தேர்தல்களுக்கான மாநில அளவிலான வழிகாட்டும் குழு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

2. இந்த அணுகத்தக்க தேர்தல்களுக்கான மாநில அளவிலான வழிகாட்டும் குழுவின் முதல் கூட்டம் 19–02–2019 அன்று தலைமைத் தேர்தல் அதிகாரி தலைமையில் நடைபெற்றது. பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, பொதுப்பணித்துறை ஆகிய அரசுத் துறைகளைச் சார்ந்த அலுவலர்களும் மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இக்குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர்.

3. இக்கூட்டத்தில் கீழ்க்காணும் பொருள்கள் விவாதிக்கப்பட்டன:

1. வாக்குச்சாவடிவாரியாக மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிந்து தரவுதளத்தில் குறியீடு செய்தலையும் அவ்வப்போது விவரங்களைத் திருத்துதலையும் உறுதிசெய்தல்.
2. வாக்காளர் பட்டியலில் பதிவு பெறாத மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிந்து பதிவு செய்தலை உறுதிசெய்தல்.
3. மாற்றுத் திறனாளிகள் தேர்தல் நடைமுறைகளில் சிறந்த முறையில் பங்கேற்க உகந்த தடைகளற்ற சூழலை மாநிலத்தில் உருவாக்குதல்.
4. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புத் தேவைகள் குறித்து தேர்தல் பணியாளர்களுக்கு அவர்களின் பயிற்சிக் காலத்தில் உணர்த்துவதை உறுதிசெய்தல்.
5. சக்கர நாற்காலிகள் ஏற்பாடு செய்தல்.
6. அனைத்து வாக்குச் சாவடிகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த வகையிலான குறைந்தபட்ச வசதிகளை ஏற்பாடு செய்தல்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி,**
**தமிழ்நாடு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**